## முதலியாண்டான்
## திருநாள் பாட்டு

எட்டும் இரண்டுடன் ஏதமில் வேதமும் ஓதி உணர்ந்திடு நாள்
எங்கும் இடர் கெட அங்கம் உபாங்கமும் ஓங்கி உயர்ந்திடு நாள்
மட்டவிழும் பொழில் மன்னும் அரங்கர் தம் செங்கோல் சிறந்திடு நாள்
மாகுடபாலைந்து நாரணனார் பதி வாழ்வு பொலிந்திடு நாள்
இட்டம் உயர்ந்து எதிராசருடன் மறை முப்புரியூட்டிய நாள்
என் மருமான் என்றிவர் பதமும் தண்டமும் ஆக்கிக் கொண்டருள் நாள்
சிட்டர் மகிழ்ந்திட தாசரதிக் குரு போந்து பிறந்தருள் நாள்
சித்திரையில் புனர்பூசம் அதாகிய செல்வம் மகிழ்ந்திடு நாளே

---